**<u>In the court of the Additional Subordinate Judge, Tenkasi.</u>**

<u>Deposition of Witness</u>

O.S. 456/2018

**பி.வா.சா.2 மகேந்திரன்**

| | |
|---|---|
| Name | : மகேந்திரன் |
| Father's name | : |
| Village | : |
| Taluk | : |
| Occupation | : |
| Age | : |
| Date | : 20.04.2026 |

**சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை நிரூபண வாக்குமூலம் தாக்கல்**

நான் சுரண்டை நகராட்சியில் சூப்பர்வேசராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்துள்ளதால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். சுரண்டை நகராட்சி என்பது இதற்கு முன்பு பேரூராட்சியாக இருந்தது. நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணையில் சொல்லப்பட்டுள்ள ஆவணத்தை கொண்டு வரவில்லை, அந்த ஆவணம் தற்போது எங்கள் அலுவலகத்தில் இல்லை. பேரூராட்சி இருந்தபோது, கொடுக்கப்பட்ட ஆவணமாகும். இதுநாள் வரை அந்த ஆவணம் நகராட்சியில் ஒப்படைக்கப்படவில்லை. என்னிடம் காட்டப்பட்ட 03.02.2017 தேதியிட்ட சுரண்டை பேரூராட்சி அலுவலகத்தில் இருந்து கொடுக்கப்பட்ட அறிவிப்பு நகல் எங்கள் அலுகலத்தில் இருந்து கொடுக்கப்பட்டதா என்று தெரியவில்லை. அதில் கையெழுத்து போட்ட நபர் யார் என்று தெரியவில்லை. நான் 4 ஆண்டுகளாக அந்த அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறேன். 03.02.2017 நான் அங்கு பணியில் இல்லை. அப்போது அங்கு இருந்த செயல் அலுவலர் யாரென்று எனக்கு தெரியாது. தற்போது உள்ள நகராட்சி ஆணையரை அழைத்து விசாரித்தால் தான் தெரியும்.

குறுக்கு விசாரணை இல்லை.

(ஒம்)எஸ். முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.